இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 15.02.2026

# சதியை முறியடித்த முதலமைச்சர்!

**ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு 5 ஆயிரம் ரூபாயை வழங்கி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்! 'மாண்புமிகு' என்பதையும் தாண்டி கூடுதலாக 'கருணைமிகு' முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்று சொல்வதே பொருத்தமானது! மக்கள் சூட்டிய மகுடம் 'மாண்புமிகு'. அத்தோடு சேர்த்து இனி மக்கள் சொல்லப் போவது 'கருணைமிகு".**

1.31 கோடி மகளிர் இப்போது ஆயிரம் ரூபாயை மாதம் தோறும் உரிமைத் தொகையாகப் பெற்று வருகிறார்கள். "திராவிட மாடல் 2.0 - ஆட்சியில் உரிமைத்தொகையை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்குவோம்" என்று அறிவித்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர். வாக்குறுதி கொடுத்தால் செய்துவிடுவார் என்று பெயர் எடுத்தவர் முதலமைச்சர். அதனால் மக்கள் அவரை மனப்பூர்வமாக நம்புகிறார்கள்.

"இது, என் சகோதரிகளுக்கு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொடுக்கும் வாக்குறுதி! வெல்வோம் ஒன்றாக!" என்று உறுதி அளித்துள்ளார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

இன்னொரு முக்கியமான கருணைமிகு செயலையும் முதலமைச்சர் அவர்கள் செய்துள்ளார்கள். பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணம் 3,000 ரூபாயைக் கொடுக்கச் சொல்லிவிட்டார் முதலமைச்சர். அத்தோடு கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பாக 2,000 ரூபாயும் கொடுக்கச் சொல்லி விட்டார். இதன்படி 1.31 கோடி மகளிருக்கு 5 ஆயிரம் ரூபாய் நேற்று காலையிலேயே (பிப்ரவரி 13) போய்ச் சேர்ந்துவிட்டது.

**5 ஆயிரம் ரூபாய் கொடுத்தார் என்பதல்ல முக்கியம். இத்திட்டத்தை முடக்க நினைத்தவரின் சதியை முறியடித்து விட்டார் முதலமைச்சர். அதுதான் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியது ஆகும்.**

கடந்த பிப்ரவரி 6 ஆம் தேதியன்று உச்சநீதிமன்றத்தில் திடீரென்று ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கறிஞர் அஷ்வினி குமார் உபாத்யாயா என்பவர் தலைமை நீதிபதி அமர்வு முன்பாக வந்து, 'இலவசங்களை வாக்குறுதிகளாகத் தரும் கட்சிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்ய வேண்டும்' என்று சொன்னார். திடீரென்று ஒருவர் இப்படி முளைக்க என்ன பின்னணி என்பதை அறிவதில் எந்தச் சிரமமும் இல்லை. பீகார் தேர்தலில் வாக்குறுதிகளை அள்ளி விடும்போது உபாத்யாயாக்கள் எங்கே போனார்கள்? இப்போது மட்டும் ஏன் முளைக்கிறார்கள்?

'ஐந்து மாநிலத் தேர்தல் வரப்போகிறது' என்று சொல்லித்தான் இந்த வழக்கைத் தாக்கல் செய்வதாக உபாத்தியாயா உபதேசம் செய்தார்.

'இந்த வழக்கை மார்ச் மாதம் விசாரிக்கிறோம்' என்று தலைமை நீதிபதி சூர்யகாந்த், ஜாய்மால்யா பாக்சி ஆகியோர் கொண்ட அமர்வு அறிவித்துள்ளது. இது எல்லாம் எதில் போய் முடியும் என்பதை முன்கூட்டியே கணித்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

**"தமிழ்நாட்டு மகளிருக்கு இந்த ஸ்டாலின் தந்த உறுதிமொழிதான் உரிமைத் தொகை. யார் தடை ஏற்படுத்தினாலும் அதிலிருந்து பின்வாங்க மாட்டேன்" என்பதை நெஞ்சுரத்தோடு மெய்ப்பித்து விட்டார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். 'மாநில அரசாங்கம் கொடுப்பதைத் தடுக்க இவர்கள் யார்?' என்பதை தனது செயலால் கேட்டுள்ளார் முதலமைச்சர்.**

**தேர்தலைக் காரணம் காட்டி, மூன்று மாதங்களுக்கு உரிமைத் தொகையை முடக்கப் பார்த்தார்கள் சிலர். முந்திக்கொண்டு தடுத்து விட்டார் நமது திராவிட நாயகன்.**

மக்களிடம் பொய் சொல்லி ஏமாற்றி வாக்குகளை வாங்கிவிட்டார் முதலமைச்சர் என்று குற்றம் சாட்டினார் பொய்யால் ஆன பழனிசாமி. ஆனால் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் 1.31 கோடி மகளிருக்கு வழங்கி வருகிறார் முதலமைச்சர்.

தமிழ்நாட்டைப் பார்த்து மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் 10 மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கர்நாடகாவில் கிரகலட்சுமி என்ற பெயரிலும் மத்தியப் பிரதேசத்தில் முதல்வர் லட்லி பெஹ்னா யோஜனா என்ற பெயரிலும் மகாராஷ்டிராவில் முதல்வர் லாட்கி பாஹின் யோஜனா எனவும் ஒடிசாவில் சுபத்ரா யோஜனா என்ற பெயரிலும் ஜார்க்கண்டில் மைய சம்மன் யோஜனா என்ற பெயரிலும் இமாசலப் பிரதேசத்தில் இந்திரா காந்தி பியாரி பெஹ்னா சுக் சம்மன் நிதி யோஜனா என்ற பெயரிலும் சத்தீஷ்கரில் மஹ்தாரி வந்தன் யோஜனா என்ற பெயரிலும் மேற்கு வங்காளத்தில் லட்சுமி பந்தர் என்ற பெயரிலும் சிக்கிமில் சிக்கிம் ஆமா யோஜனா என்ற பெயரிலும் புதுச்சேரியில் மகளிர் உதவித் தொகை என்ற பெயரிலும் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் 10 மாநிலங்களில் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் 15 லட்சம் பேரை இத்திட்டத்தில் இருந்து நீக்கினார்கள். அதுபோல தமிழ்நாடு யாரையும் நீக்காமல், விடுபட்டவர் களையும் சேர்த்தது. இதுதான் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்பு ஆகும். யாருக்கெல்லாம் தேவை என்பதை மனுக்கேட்டு வாங்கி தகுதி இருப்பின் வழங்கிய முதலமைச்சரை தமிழ்நாடு பெற்றுள்ளது.

- 5 ஆயிரம் வரவு வைத்தது
- 2 ஆயிரம் என வாக்குறுதி அளித்தது
- திட்டத்தை முடக்கும் சதியை முறியடித்தது.

- மூன்று ஆகப்பெரும் செயல்களைச் செய்துவிட்டார் கருணைமிகு முதலமைச்சர் அவர்கள்.

**வெல்லும் தமிழ்ப் பெண்கள் ஆதரவோடு மாண்புமிகு முதலமைச்சர் மீண்டும் வெல்வார். அவர் கைப்பற்றிய அரியணை அவரிடமே பாதுகாப்பாக இருக்கும். நாடும், மக்களும் பாதுகாப்பாக இருப்பார்கள்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.2.2026) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில், நாமக்கல் மாவட்டம், நவணி தோட்டக்கூர்பட்டி கிராமத்தில் 2 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்கு மார்பளவு சிலையுடன் கூடிய அரங்கம், அரியலூர் மாவட்டம், கீழப்பழுவூர் கிராமத்தில் 3 கோடி ரூபாய் செலவில் இந்தி திணிப்பினை எதிர்த்துப் போராடி முதன் முதலில் உயிர்த் தியாகம் செய்த கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கு அரங்கம், ஈரோடு மாவட்டம், அரச்சலூர் ஓடாநிலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை மணிமண்டப வளாகத்தில் 1 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள குதிரையின் மேல் அமர்ந்தபடி உள்ள தீரன் சின்னமலை அவர்களின் வெண்கலச் சிலை, கரூர் மாவட்டம், எல்லைகாட்டு ராமச்சந்திரபுரம் கிராமத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் கரூர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி. முத்துசாமி அவர்களுக்கு திருவுருவச் சிலை ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.02.2026) தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் 82 கோடியே 9 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் செலவிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் 35 கோடியே 02 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் தடய அறிவியல் துறை சார்பில் 5 கோடியே 6 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மரபணு பிரிவுக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தாம்பரம் காவல் ஆணையர் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் திருமதி. சீமா அகர்வால், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் வினித் தேவ் வான்கேடே, சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண், தடய அறிவியல் துறை இயக்குநர் திருமதி. அ. விசாலாட்சி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விருப்ப ஓய்வு பெற்ற மத்திய ஜி.எஸ்.டி.நுண்ணறிவு முதன்மை கூடுதல் தலைமை இயக்குநர்

## முனைவர் க.பாலமுருகன், ஐ.ஆர்.எஸ். தி.மு.க.வில் இணைந்தார்!

### முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (13-02-2026) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில். விருப்ப ஓய்வு பெற்ற மத்திய ஜி.எஸ்.டி.நுண்ணறிவு முதன்மை கூடுதல் தலைமை இயக்குநர் (Voluntarily Retired Principal Additional Director General (DG GST Intelligence) முனைவர் க.பாலமுருகன், ஐ.ஆர்.எஸ். அவர்கள் தி.மு.க.வில் இணைந்தார்.

அதுபோது கழக துணைப் பொதுச்செயலாளர் - அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர் எஸ்.ரகுபதி, மாநில அயலக அணி இணைச் செயலாளர் டாக்டர் எஸ்.செந்தில்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

### எதிர்க்கட்சிகள் நீதிமன்ற வழக்குகள் மூலம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை நிறுத்த செய்த சதியை உணர்ந்துதான்

## ரூ. 5000-ஐ முதலமைச்சர் முன்கூட்டியே வழங்கியுள்ளார்!

### சென்னை – அண்ணா அறிவாலயத்தில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

**சென்னை, பிப்.15-**

**எதிர்க்கட்சிகள் நீதிமன்ற வழக்குகள் மூலம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை முடக்க நினைத்த சதியை உணர்ந்துதான் 5000 ரூபாயை முதலமைச்சர் முன்கூட்டியே வழங்கியுள்ளார் என்று திராவிட மாடல் 2.0 அரசு அமைவதையும் மக்களுக்கு கிடைக்க உள்ள நன்மைகளையும் யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் நேற்று முன்தினம் (13-02-2026) சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தது குறித்த செய்திக்குறிப்பு வருமாறு:-**

பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்கான மகளிர் உரிமைத் தொகையான 3,000 ரூபாயை மொத்தமாக வழங்கி, 1 கோடியே 32 லட்சம் பெண்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஓர் இன்ப அதிர்ச்சியைத் தந்துள்ளார். "2,000 ரூபாய் தரப்போகிறேன்" என்று வாய் சொல்லிக் கொண்டிருக்கும் எடப்பாடி பழனிச்சாமியின் வாயை, சொன்னதைச் செய்து காட்டும் நம் முதலமைச்சர் இன்றைக்குத் தைத்து விட்டார். இந்தத் தொகையை அறிவித்துவிட்டு வழங்கினால், எதிர்க்கட்சிகள் உடனடியாக நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு வாங்கி விடுவார்கள் என்பதால், பெண்களுக்கு கிடைக்க வேண்டிய அந்தப் பயன் தடையின்றிச் சேர வேண்டும் என இன்று காலையிலேயே முதலமைச்சர் இதனை வழங்கியுள்ளார்.

ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை என்பதைப் போல, மக்களின் துன்பங்களை நீக்கக்கூடிய சக்திமிக்க உதய சூரியனாக முதலமைச்சர் விளங்குகிறார். பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும் எத்தனை கூட்டுச் சதிகள் செய்தாலும், திராவிட மாடல் 2.0 அரசு அமைவதையோ அதன் மூலம் மக்களுக்கு கிடைக்க உள்ள நன்மை



களையோ நிச்சயமாக தடுத்து நிறுத்த முடியாது. முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் அதிரடி என்பது "சொல்லல்ல செயல்" என்பதாகும்; அவர் இந்தியாவே வியக்கும் வகையில் பல திட்டங்களைத் தந்து, ஒன்றிய அரசின் மக்கள் விரோதத் திட்டங்களுக்கும் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் திட்டங்களுக்கும் எதிராக முதல் குரல் கொடுக்கும் தலைவராகத் திகழ்கிறார்.

**வாக்குறுதிகள் நிறைவேற்றம்!**

கடந்த இரண்டு மாதங்களுக்குள்ளாகவே தமிழ்நாட்டு மக்களுக்கு 9,000 ரூபாய் கிடைத்திருக்கிறது; வரலாற்றிலேயே எந்த ஆட்சியிலும் இல்லாத வகையில், தேர்தலுக்கு முன்பே வாக்குறுதிகளை நிறைவேற்றி வரும் ஆட்சி நம் தலைவரின் ஆட்சி. மூன்று மாதங்களுக்கு தலா 1000 ரூபாய் தந்து 2000 ரூபாய் போனஸாக தந்திருக்கிறார் நம் முதலமைச்சர். வறுமையை ஒழிக்கும் சமூக நலத் திட்டங்களை "ரேவடி கலாச் சாரம்" என்று கொச்சைப்படுத்தினார் பிரதமர் மோடி.

மகளிருக்குச் சேமிப்பைத் தரும் விடியல் பயணத் திட்டத்தையும் வரிப் பணத்தை வீணாக்கும் செயல் என்று விமர்சித்தார். ஆனால், எங்கள் தலைவர் இதனை "மக்களை வாழ வைக்கும் செயல்" என்று கூறுகிறார். விடியல் பயணத் திட்டத்தால் மெட்ரோ ரயில் வருவாய் பாதிக்கப்படுவதாகச் சொன்னார் பிரதமர் மோடி. ஆனால் மெட்ரோ ரயில் வருவாய் பாதிக்கப்படவில்லை.

பெரிய கார்ப்பரேட்டுகளுக்காகக் கடந்த ஐந்தரை ஆண்டுகளில் 16 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கான பொதுத் துறை வங்கிக் கடன்களைத் தள்ளுபடி செய்த ஒன்றிய பாஜக அரசு, பெண்களுக்கு வழங்கப்படும் 1,000 ரூபாய் மீது மட்டும் வன்மத்தைக் காட்டுகிறது.

பெண்களுக்கு வழங்கப்படும் பணம் அப்படியே டாஸ்மாக் கடைகள் மூலம் திரும்ப வசூலிக்கப்படுகிறது என்று கூறி தமிழ்நாட்டு மக்களைக் கொச்சைப்படுத்துவதுதான் பாஜகவின் தொழிலாக இருக்கிறது. அதிமுகவும் இந்த வன்மத்தைத் தான் கக்கிக்கொண்டு இருக்கிறது. ஆனால் பெண்கள் தங்கள் கையில் 5,000 ரூபாய் நோட்டுகளைக் காண்பித்து, மகிழ்ச்சியோடு கடைவீதிக்குச் செல்லும் காட்சியை நாம் காண்கிறோம்.

தமிழ்நாட்டின் இத்திட்டத்தைப் பின்பற்றி மகாராஷ்டிரா மற்றும் டெல்லி போன்ற மாநிலங்களில் தேர்தலுக்காக இத்திட்டத்தை அறிமுகப்படுத்திய பாஜக, தேர்தல் முடிந்தவுடன் பயனாளிகளைக் குறைத்துவிட்டது. தமிழ்நாட்டில் பயனாளிகளின் எண்ணிக்கை 1.16 கோடியிலிருந்து 1 கோடியே 31 லட்சத்து 69 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது, ஆனால் மகாராஷ்டிராவில் தேர்தல் முடிந்தவுடன் 26 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

**முதல்வர் திட்டத்தை 12 மாநிலங்கள் நிறைவேற்றியுள்ளன!**

ஒன்றிய அரசு கல்விக்கான நிதி மற்றும் நூறுநாள் வேலைக்கான நிதியை முடக்கிய நிதி நெருக்கடியிலும், இத்திட்டத்தை விரிவுபடுத்தியவர் நம் முதலமைச்சர்; இது அவர் மக்கள் மீது கொண்டுள்ள அன்பைக் காட்டுகிறது; இத்திட்டத்தைப் பின்பற்றி தற்போது 12 மாநிலங்களில் இத்தகைய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தைச் சகித்துக்கொள்ள முடியாத பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க.வினர், சட்டமன்றத் தேர்தலைச் சாக்காக வைத்து நீதிமன்ற வழக்குகள் மூலம் முடக்கச் சதி செய்தனர். இதை உணர்ந்துதான் பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான தொகையை முதலமைச்சர் முன்கூட்டியே வழங்கியுள்ளார். விடியல் பயணத் திட்டம் சாத்தியமில்லை என்றும், பஸ் ஓட்ட முடியாது, டயர் வாங்க முடியாது என்றும் எள்ளி நகையாடிய எடப்பாடி பழனிசாமியின் கூற்றுகளைப் பொய்யாக்க போல முதலமைச்சர் இதைச் சாதித்துக் காட்டியுள்ளார்.

அ.தி.மு.க. ஆட்சியின் கடன்களைத் தீர்த்ததோடு, கஜானா காலியாக இருந்த நிலையிலும் விடியல் பயணத் திட்டத்தை உடனே வழங்கினோம்; மேலும் பெண்களுக்கு மாதந்தோறும் 1000 ரூபாய் சேமிப்பு கிடைத்தது. எடப்பாடி பழனிசாமி அவர்கள் மடிக்கணினித் திட்டம், தாலிக்குத் தங்கம் போன்ற திட்டங்களை நிறுத்திவிட்டுச் சென்றவர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர், தேர்தல் நேரத்தில்தான் கோடை கால நிதி வழங்கப்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தவறானவை; பொங்கலுக்கு 3000 ரூபாய் வழங்கியதும் இத்தகைய ஒரு மக்கள் நலச் செயல்தான். திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இன்னும் பல புரட்சிகரமான திட்டங்கள், கல்வி மற்றும் பொருளாதாரத்தை உயர்த்தும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். திட்டங்களை முடக்கச் சதி நடந்தாலும், அதை எதிர்த்துப் போராடி வெல்வோம், என்றும் அவர் தெரிவித்தார்.